சார்பு நீதிமன்றம், உத்தமபாளையம்

நாள்: 23.08.2024 SC.119/2021

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | : | டாக்டர்.கணேசன் | தொழில் | : |
| தகப்பனார்/கணவர் பெயர் | : | | வயது | : |
| விலாசம் | : | | | |

**அ.சா.23**

---

முதல் விசாரணை

நான் மதுரை மீனாட்சி மிசன் மருத்துவமனையில் கடந்த 20 வருடமாக மூத்த இருதய நோய் நிபுணராக பணியாற்றி வருகிறேன். கடந்த 22.02.2018ம் தேதி திரு.சாமி என்பவர் என்னிடம் சிகிச்சைக்காக வந்திருந்தார். அவரை நான் பரிசோதனை செய்ததில் 2007ல் அவருக்கு இருதய வால்வு மாற்று சிகிச்சை செய்ததாக என்னிடம் கூறினார். அது சம்மந்தமான மருத்துவ ஆவணங்களை என்னிடம் சமர்ப்பித்தார். அதை பார்த்தபோது அவருக்கு செயற்கையாக வால்வு பொருத்தப்பட்டிருந்தது தெரியவந்தது. அவரை நான் பரிசோதனை செய்தபோது அவருடைய சிறுநீரில் ரத்தம் கலந்து செல்வதாகவும், அவருக்கு வயிற்றுவலி இருப்பதாகவும் என்னிடம் தெரிவித்தார். செயற்கை வால்வு பொருத்தப்பட்டிருந்தால் ரத்தம் உறையாமல் இருக்க அவருடைய வாழ்நாள் முழுவதும் Acitrom என்ற மாத்திரையை தினமும் உட்கொள்வதாக என்னிடம் தெரிவித்தார். அந்த மாத்திரையை அவர் தொடர்ச்சியாக எடுத்தால் INR Test பரிசோதனை நான்கு வாரத்திற்கு ஒரு முறை செய்து அந்த மாத்திரையை உறுதி செய்வோம். அந்த INR Test 2.5 முதல் 3.5 விகிதாச்சாரத்தில் இருக்க வேண்டும். ஆனால் அவரை INR Test செய்யும்போது 23.4 என்று பத்து மடங்கு அதிகமாக இருந்தது. அந்த அதிகமான அளவில் இருக்கும்போது மாத்திரை எடுப்பதை நிறுத்திவிட்டு சரியான நிலைக்கு வந்தபின்னர் மீண்டும் மாத்திரை எடுக்க அனுமதிப்போம். 22.02.2018 முதல் 26.02.2018 வரை இருந்தார். மீண்டும் அவருக்கு INR Test எடுத்து Warf-3 என்ற மாத்திரையை பரிந்துரைத்து அவரை மருத்துவ விடுப்பு செய்து எங்கள் மருத்துவமனையிலிருந்து விடுவித்தோம். மீண்டும் 06.03.2018ல் மருத்துவ பரிசோதனைக்கு ஆஜரானார். அந்த முறை ரத்தம் கலந்து சளி வருவதாகவும் மற்றும் மூச்சுத்திணறல் இருப்பதாகவும் கூறினார். ரத்தம் உறையும் நேரம் அதிக நேரம் இருந்தது. அவர் மீண்டும் உள்நோயாளியாக அனுமதிக்க பரிந்துரைந்தோம். ஆனால் அவர் அன்று உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்டு 07.03.2018ல் விடுவிக்கப்பட்டார். 10.03.2018, 11.03.2018, 14.03.2018 ஆகிய

தேதிகளிலும் இறுதியாக 31.03.2018ம் தேதியும் என்னிடம் வெளிநோயாளியாக இருந்து மருத்துவ சிகிச்சை எடுத்துக்கொண்டார். இந்த வழக்கு சம்மந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

குறுக்கு விசாரணை

என்னிடம் மருத்துவ பரிசோதனைக்கு வந்தபோது சாமி நல்ல மன மற்றும் உடல்நிலையில் இருந்தார். அவராகவே அவருடைய மருந்தை எடுத்து உட்கொள்ளும் அளவில் உடல் தகுதி இருந்தது. சில நபர்கள் அவர்களாகவே மருத்துவரின் பரிந்துரை இல்லாமல் ஒரு மாத்திரைக்கு இரண்டு மாத்திரையை எடுத்துக்கொள்வார்கள் என்றால் சாமி எடுத்துக்கொண்ட Acitorm மாத்திரையை அவ்வாறு எடுத்துக்கொள்ள மாட்டார்கள். காய்ச்சல், தலைவலி போன்ற மாத்திரைகளைத்தான் எடுத்துக்கொள்வார்கள். இந்த இருதய சிகிச்சையுள்ள நபர் முறையாக மாத்திரை எடுத்துக்கொள்ளாமலும் INR பரிசோதனை செய்து கொள்ளாமலும் மருத்துவரின் கருத்துரை பெறாமலும் இருந்தால் அளவுகளில் ஏற்றம் இறக்கம் இருக்க வாய்ப்புள்ளது. அவர் 10 ஆண்டுகளாக மாத்திரை எடுத்து வரும் நிலையில் அளவு சரியாகத்தான் இருந்திருக்கும். என்னிடம் சிகிச்சைக்கு வரும்போது தான் அளவில் மாற்றம் இருந்தது. ரத்தம் உறையும் தன்மை அதிக நேரம் எடுத்துக்கொண்டதால் அதை சரி செய்வதற்காக Warf-3 என்ற மாத்திரையை எடுக்க பரிந்துரைத்தேன். இல்லாவிட்டால் ரத்தக்கசிவு ஏற்படும். சாமி என்பவரை நான் பரிசோதனை செய்த மருத்துவ பரிந்துரை (Medical summary) சாமியிடம் கொடுத்துள்ளோம். போலிசாரிடம் கொடுக்கவில்லை.

சார்பு நீதிமன்றம், உத்தமபாளையம்

நாள்: 23.08.2024 SC.113/2021

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | : | டாக்டர்.கணேசன் | தொழில் | : |
| தகப்பனார்/கணவர் பெயர் | : | | வயது | : |
| விலாசம் | : | | | |

**அ.சா.23**

---

முதல் விசாரணை

நான் மதுரை மீனாட்சி மிசன் மருத்துவமனையில் கடந்த 20 வருடமாக மூத்த இருதய நோய் நிபுணராக பணியாற்றி வருகிறேன். கடந்த 22.02.2018ம் தேதி திரு.சாமி என்பவர் என்னிடம் சிகிச்சைக்காக வந்திருந்தார். அவரை நான் பரிசோதனை செய்ததில் 2007ல் அவருக்கு இருதய வால்வு மாற்று சிகிச்சை செய்ததாக என்னிடம் கூறினார். அது சம்மந்தமான மருத்துவ ஆவணங்களை என்னிடம் சமர்ப்பித்தார். அதை பார்த்தபோது அவருக்கு செயற்கையாக வால்வு பொருத்தப்பட்டிருந்தது தெரியவந்தது. அவரை நான் பரிசோதனை செய்தபோது அவருடைய சிறுநீரில் ரத்தம் கலந்து செல்வதாகவும், அவருக்கு வயிற்றுவலி இருப்பதாகவும் என்னிடம் தெரிவித்தார். செயற்கை வால்வு பொருத்தப்பட்டிருந்தால் ரத்தம் உறையாமல் இருக்க அவருடைய வாழ்நாள் முழுவதும் Acitrom என்ற மாத்திரையை தினமும் உட்கொள்வதாக என்னிடம் தெரிவித்தார். அந்த மாத்திரையை அவர் தொடர்ச்சியாக எடுத்தால் INR Test பரிசோதனை நான்கு வாரத்திற்கு ஒரு முறை செய்து அந்த மாத்திரையை உறுதி செய்வோம். அந்த INR Test 2.5 முதல் 3.5 விகிதாச்சாரத்தில் இருக்க வேண்டும். ஆனால் அவரை INR Test செய்யும்போது 23.4 என்று பத்து மடங்கு அதிகமாக இருந்தது. அந்த அதிகமான அளவில் இருக்கும்போது மாத்திரை எடுப்பதை நிறுத்திவிட்டு சரியான நிலைக்கு வந்தபின்னர் மீண்டும் மாத்திரை எடுக்க அனுமதிப்போம். 22.02.2018 முதல் 26.02.2018 வரை இருந்தார். மீண்டும் அவருக்கு INR Test எடுத்து Warf-3 என்ற மாத்திரையை பரிந்துரைத்து அவரை மருத்துவ விடுப்பு செய்து எங்கள் மருத்துவமனையிலிருந்து விடுவித்தோம். மீண்டும் 06.03.2018ல் மருத்துவ பரிசோதனைக்கு ஆஜரானார். அந்த முறை ரத்தம் கலந்து சளி வருவதாகவும் மற்றும் மூச்சுத்திணறல் இருப்பதாகவும் கூறினார். ரத்தம் உறையும் நேரம் அதிக நேரம் இருந்தது. அவர் மீண்டும் உள்நோயாளியாக அனுமதிக்க பரிந்துரைந்தோம். ஆனால் அவர் அன்று உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்டு 07.03.2018ல் விடுவிக்கப்பட்டார். 10.03.2018, 11.03.2018, 14.03.2018 ஆகிய

தேதிகளிலும் இறுதியாக 31.03.2018ம் தேதியும் என்னிடம் வெளிநோயாளியாக இருந்து மருத்துவ சிகிச்சை எடுத்துக்கொண்டார். இந்த வழக்கு சம்மந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

குறுக்கு விசாரணை

என்னிடம் மருத்துவ பரிசோதனைக்கு வந்தபோது சாமி நல்ல மன மற்றும் உடல்நிலையில் இருந்தார். அவராகவே அவருடைய மருந்தை எடுத்து உட்கொள்ளும் அளவில் உடல் தகுதி இருந்தது. சில நபர்கள் அவர்களாகவே மருத்துவரின் பரிந்துரை இல்லாமல் ஒரு மாத்திரைக்கு இரண்டு மாத்திரையை எடுத்துக்கொள்வார்கள் என்றால் சாமி எடுத்துக்கொண்ட Acitorm மாத்திரையை அவ்வாறு எடுத்துக்கொள்ள மாட்டார்கள். காய்ச்சல், தலைவலி போன்ற மாத்திரைகளைத்தான் எடுத்துக்கொள்வார்கள். இந்த இருதய சிகிச்சையுள்ள நபர் முறையாக மாத்திரை எடுத்துக்கொள்ளாமலும் INR பரிசோதனை செய்து கொள்ளாமலும் மருத்துவரின் கருத்துரை பெறாமலும் இருந்தால் அளவுகளில் ஏற்றம் இறக்கம் இருக்க வாய்ப்புள்ளது. அவர் 10 ஆண்டுகளாக மாத்திரை எடுத்து வரும் நிலையில் அளவு சரியாகத்தான் இருந்திருக்கும். என்னிடம் சிகிச்சைக்கு வரும்போது தான் அளவில் மாற்றம் இருந்தது. ரத்தம் உறையும் தன்மை அதிக நேரம் எடுத்துக்கொண்டதால் அதை சரி செய்வதற்காக Warf-3 என்ற மாத்திரையை எடுக்க பரிந்துரைத்தேன். இல்லாவிட்டால் ரத்தக்கசிவு ஏற்படும். சாமி என்பவரை நான் பரிசோதனை செய்த மருத்துவ பரிந்துரை (Medical summary) சாமியிடம் கொடுத்துள்ளோம். போலிசாரிடம் கொடுக்கவில்லை.